**தலைப்பு 105 – வெகுசன ஊடக அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வெகுசன ஊடக அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் வெகுசன ஊடக அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 செப்தெம்பர் 14 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்தெம்பர் 14 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான வெகுசன ஊடக அமைச்சின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது அமைச்சிற்கு சொந்தமான 28 வாகனங்கள் காணப்பட்டதுடன் அவ் வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. ஆகையால் ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் பெறுமதி சரியாக காணப்படவில்லை. | தேசிய கணக்காய்வு அலுவலகத்தால் சமர்ப்பிக்கப்பட்ட 2021 மே 06 ஆம் திகதிய எம்ஈடி/ஏ/எம்எம்/ஏ,பீ,சீ,டி/2020/05 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்காக மீளக்குறிப்பிடப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2021 மே 19 ஆம் திகதிய எம்எம்ஜ/7/9/92-2021 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் மீளச் சமர்ப்பிக்கப்பட்டது. | அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களின் பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 2020 ஆம் ஆண்டிற்கான செலவின அறிக்கை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 08 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் வெகுசன ஊடக அமைச்சு தலைப்பு 105 இன் கீழ் நிறுவப்பட்டது. 2020 சனவரி முதல் 2020 ஆகஸ்ட் 31 வரை முன்னாள் சனாதிபதி செயலகம் மற்றும் 3 அமைச்சுக்களின் 73 செலவினக் குறியீடுகளின் கீழ் ஏற்பட்ட ரூபா 805 மில்லியன் தொகையான மொத்த செலவினம் இந்த அமைச்சின் செலவினமாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | 2020 ஒக்தோபர் 20 இல் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட 2020 இன் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 10 மற்றும் 12 ஆம் பிரிவுகளின் விதிமுறைகளின் பிரகாரம், 2020 சனவரி முதல் 2020 ஆகஸ்ட் 31 வரையிலான செலவினங்கள் 2020 இன் 6 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அட்டவணை 1 இல் குறிப்பிடப்பட்ட செலவினத் தலைப்புக்களின் கீழுள்ள செலவினக் குறியீடுகளுக்கு உள்வாங்கப்பட வேண்டும். அதற்கிணங்க திறைசேரி அறிவுறுத்தல்களின் பிரகாரம் 2020 நவம்பர் 30 ஆம் திகதிய 6/2020 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கைக்கு இணங்க குறித்த பணி மேற்கொள்ளப்பட்டது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் செலவினம் சரியாக அறிக்கையிடப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 07 மீண்டெழும் செலவினக் குறியீடுகளின் ரூபா 1,237,496 தொகை மற்றும் 10 மூலதனச் செலவினக் குறியீடுகள் ரூபா 115,959,168 தொகையான தேறிய நிதியேற்பாட்டில் 51 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை சேமிப்புக்கள் காணப்பட்டன. குறித்த செலவினக் குறியீடுகளின் ஏற்பாடுகளை முறையாகப் பயன்படுத்தாமை அல்லது மதிப்பீடுகளை தயாரிப்பதில் உள்ள குறைபாடுகள் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | நாட்டில் கொவிட் பரவியதன் காரணமாக எதிர்பார்த்தவாறு பணிகளை மேற்கொள்ள இயலாமையின் விளைவாக செலவினக் குறியீடுகளில் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டன. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் செலவின மதிப்பீடுகள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட்ட ரூபா 217,669 தொகையான இரண்டு பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் போது தீர்ப்பனவு செய்யப்பட்ட ரூபா 217,669 தொகையான பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள், அந்த பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் அறிக்கையிடப்பட்டிருக்காததன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. சேவை தேவைப்பாடுகளின் அடிப்படையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணம் 150 இன் பிரகாரம் அனைத்துப் பொறுப்புக்களும் வருடாந்த நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2020 ஆம் ஆண்டில் செலவினக் குறியீடு 105-01-03-1409 இன் கீழ் அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்கான பொறுப்பாகக் காட்டப்பட்டிருந்த ரூபா 659,610 தொகை 2021 பெப்ரவரி 02 இல் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இது 2021 ஆம் ஆண்டின் வாக்குப்பண பேரேட்டில் முன்னைய ஆண்டில் ஏற்பட்ட பொறுப்புக்களாக காட்டப்படாமல் 2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொறுப்புக்களாக காட்டப்பட்டிருந்தன. | அரசாங்க அச்சகத் திணைக்களத்திற்கான பொறுப்பாகக் காட்டப்பட்ட ரூபா 659,610 தொகை முன்னைய ஆண்டில் ஏற்பட்ட கடப்பாடுகளாக காட்டப்படுவதற்குப் பதிலாக 2021 ஆம் ஆண்டில் ஏற்பட்ட பொறுப்புகளாக தவறுதலாக காட்டப்பட்டுள்ளது. | அமைச்சின் ஏடுகள் முறையாக பேணப்பட வேண்டும். |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரின் சான்றுபடுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பின்வரும் விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளகக் | அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய |

| | | |
|---|---|---|
| கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்றிறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டியதுடன் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக உறுதிப்படுத்தும் கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணப்பட்டுள்ளதுடன் குறித்த முறைமையின் செயற்திறனை மீளாய்வு செய்து பிரதியொன்று எதிர்காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படும். | கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களிலுள்ள ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | தொகை<br>ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 2015 யூலை 14 ஆம் திகதிய 3/2015 ஆம் இலக்க மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 1/2020 ஆம் இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கைகள் | 676,235 | குறித்துரைக்கப்பட்ட நோக்கம் நிறைவடைந்த பின்னர் 10 நாட்களுக்குள் முற்பணத்தைப் பெற்றுக்கொள்ளும் பதவியணி உத்தியோகத்தரால் செயல்நிமித்த கட்டுநிதி தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 18 நாட்கள் முதல் 116 நாட்கள் வரையிலான | கொவிட் 19 தொற்றுநோய் காரணமாக மட்டுப்படுத்தப்பட்ட பதவியணியினரே கடமைக்காக அறிக்கையிட்டிருந்ததால் கட்டுநிதிகளின் தீர்ப்பனவுகள் தாமதமடைந்திருந்தன. எனினும் எதிர்காலத்தில் இது போன்ற தாமதங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | கட்டுநிதிகளை பெற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களால் கட்டுநிதிகள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

காலதாமதம் ஒன்றுடன் முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த 26 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.6 முற்பணங்களை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெற்றுக்கொண்ட முற்பணங்களை முறையாக தீர்ப்பனவு செய்யத் தவறிய 3 உத்தியோகத்தர்களுக்கு முற்பணத்தை வழங்குவதை தவிர்க்குமாறு பிரதம கணக்காளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இதற்கு முரணாக ரூபா 258,950 தொகையான முற்பணங்கள் 14 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்தன. | உத்தியோகத்தர்களால் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படும் வரை முற்பணம் வழங்கப்படக்கூடாது என பிரதம கணக்காளர் முற்பண பதிவேட்டில் குறிப்பிட்டிருந்தார். இருந்த போதிலும் குறித்த உத்தியோகத்தர்களால் முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்பட்ட பின்னர் பதவிநிலை உத்தியோகத்தரின் பெயருக்கு முற்பணங்கள் வழங்கப்பட்டன. | வழங்கப்பட்ட முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படுவதை உறுதிப்படுத்திய பின்னர் முற்பணங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | முன்னைய முற்பணத்தைத் தீர்ப்பனவு செய்வதற்கு முன்னர் 4 உத்தியோகத்தர்களுக்கு 20 சந்தர்ப்பங்களில் ரூபா 335,408 தொகையான முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்தன. | அமைச்சில் (குழு கூட்டங்கள், பொருட்களின் கொள்வனவுகள்) இடம்பெற்ற அவசர விடயங்களுக்காக அடிக்கடி முற்பணங்கள் வழங்கப்பட வேண்டியிருந்தது. மேலும் 2020 ஆம் ஆண்டின் போது அமைச்சில் மட்டுப்படுத்தப்பட்ட பதவிநிலை உத்தியோகத்தர்கள் மாத்திரமே காணப்பட்டதுடன் அந்த பதவிநிலை உத்தியோகத்தர்களின் பெயருக்கு மாத்திரமே முற்பணங்கள் வழங்கப்படுகின்றன. ஆகையால் பெற்றுக்கொண்ட முற்பணங்களைத் தீர்ப்பனவு செய்வதற்கு முன்னர் முற்பணங்கள் வழங்கப்பட வேண்டியிருந்த சில | வழங்கப்பட்ட முற்பணங்கள் தீர்ப்பனவு செய்யப்படுவதை உறுதிப்படுத்திய பின்னர் முற்பணங்களை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

### 2.7 முற்பணக் கணக்கு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதவி வறிதாக்கப்பட்ட 3 உத்தியோகத்தர்களிடமிருந்து பெறவேண்டிய ரூபா 231,188 தொகையான மீதியொன்று காணப்பட்டதுடன் அத் தொகை தொடர்பான வயது பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2021 மார்ச் 31 வரையிலும் குறித்த நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 யூலை 23 இல் பதவி வறிதாக்கப்பட்ட அறிவித்தல் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களால் சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீட்டின் அடிப்படையில் 2021 ஏப்ரல் 29 இல் பூர்வாங்க விசாரணை நடாத்தப்பட்டது. எதிர்காலத்தில் குறித்த உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தாமதமின்றி நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சின் 2 பிரதான பிரிவுகளின் கீழ் 2020 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயலநடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 9.235 மில்லியன் செலவினத்திற்கான 3 செயற்பாடுகளிற்குரிய செயலாற்றலின் செயன்முன்னேற்றம் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | நாடு முழுவதும் பரவியுள்ள கொவிட் தொற்றுநோய் காரணமாக திட்டமிட்டவாறு நடவடிக்கைகளை எடுக்க முடியாதிருந்தது. | திட்டமிட்டவாறு செயற்பாடுகளை முறையாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 பெறுகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டலின் 4.2.1 (உ) இன் பிரகாரம் பெறுகைத் திட்டம் 6 மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதி ஒன்றினுள் ஒழுங்காக நாளதுவரையாக்கப்பட வேண்டிய போதிலும் அமைச்சின் பெறுகைத் திட்டம் அதற்கிணங்க நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டலின் 4.2.1 (உ) இன் பிரகாரம் 6 மாதங்களுக்கு மேற்படாத காலப்பகுதி ஒன்றினுள் பெறுகைத் திட்டத்தை ஒழுங்காக நாளதுவரையாக்குவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டலின் 4.2.2 (அ) இன் பிரகாரம் பெறுகை நடவடிக்கையின் ஆரம்பம் முதல் இறுதி வரை அனைத்து படிமுறைகளையும் முறையாக விபரிக்கும் பெறுகைக் கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் விபரமான பெறுகைத் திட்டம் அமைச்சால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டலின் 4.2.2 (அ) இன் பிரகாரம் பெறுகை நடவடிக்கையின் ஆரம்பம் முதல் இறுதி வரை அனைத்து படிமுறைகளையும் முறையாக விபரிக்கும் பெறுகைக் கால அட்டவணையொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் விபரமான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட முடியாதிருந்தது, ஏனெனில் 2020 ஆம் ஆண்டிற்கான வாக்குப்பண கணக்கு மூலம் பெறுகை நடவடிக்கைகளுக்காக நிதியேற்பாடுகள் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்கத் தகவல் திணைக்களத்திற்குச் சொந்தமான பிடி-9625 ஆம் இலக்க கெப் வாகனம் அமைச்சினால் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் 2016 திசெம்பர் 26 இல் விபத்துக்குள்ளாகியிருந்தது. விபத்து இடம்பெற்ற சமயத்தில் குறித்த கெப் வாகனத்தை வாகனத்திற்கு இணைப்புச் | சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரால் வாகனம் ஓட்டுவது அமைச்சிற்கு தெரியாமல் நடந்துள்ளது. விசாரணைக்குப் பின்னர் அந்த உத்தியோகத்தர்தான் பொறுப்பு என்று தீர்மானிக்கப்பட்டு, அவரிடமிருந்து நட்டத்தை | பொது ஆதனத்தின் பாதுகாப்பை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்ட சாரதிக்குப் பதிலாக முன்னாள் அமைச்சரின் ஒருங்கிணைப்பு செயலாளரே ஓட்டிச் சென்றுள்ளதுடன் மோட்டார் போக்குவரத்து திணைக்களம் 2019 யூன் 27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அவருக்கு சாரதி அனுமதிப்பத்திரம் இல்லை என்று அறிவித்திருந்தது. மேலும் நி.பி. 104(1) இன் பிரகாரம் சேதத்தின் அளவு மற்றும் அதற்கான காரணங்களைத் தீர்மானிப்பதற்கும் சேதம் அல்லது நட்டம் ஏற்பட்டவுடன் சேதத்திற்குப் பொறுப்பான நபர்களைத் தீர்மானிப்பதற்கும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் விபத்து நடைபெற்று 1½ வருடத்திற்கு பின்னர் விசாரணையை நடாத்துவதற்கு அமைச்சினால் குழுவொன்று நிறுவப்பட்டிருந்தது. மேலும், பூர்வாங்க விசாரணையை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையை வழங்குவதற்கு இரண்டு ஆண்டுகள் எடுத்திருந்தன. | அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. நி.பி. 104 புலன்விசாரணை தாமதமின்றி மேற்கொள்ளப்படுவதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 158 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் 105 ஆகவும் காணப்பட்டன. இதன் விளைவாக 53 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் இந்த அறிக்கை திகதி வரையிலும் இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சிரேஷ்ட, முன்றாம் மற்றும் இரண்டாம் நிலைகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய அதிகாரிகளிற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. ஆரம்ப நிலைக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு மட்டத்தில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | வெற்றிடங்களை முறையாக நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |